

## கேட்டறிகிறோம். அலசி ஆராய்கிறோம். டொரோண்டோ நகரச் சேவைகளை மேம்படுத்த உழைக்கிறோம்

# டொராண்டோ குறைதீர்ப்பாணையம் எவ்விதத்தில் உங்களுக்கு உதவக்கூடும்?

நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டதாக நீங்கள் உணர்கிறீர்களா? டொராண்டோ நகரத்தின் சேவைகள் அல்லது நிர்வாகம் குறித்த உங்கள் புகாருக்குத் தேவையான கவனம் கிடைத்ததா? புகார் சார்ந்த நடவடிக்கைகள் உங்களுக்கு திருப்தி அளிக்கவில்லையா? இந்நிலையில் உங்களுக்கு உதவுவதிலிருந்து எங்களது பணி துவங்குகிறது.

பொறுப்பற்றமுறையில் நடந்துகொள்ளும் நாய் உரிமையாளர் முதல் வாட்டர் பில்லில் உள்ள முறைகேடுகள், வீட்டுவசதி தொடர்பான பிரச்சனைகள் மற்றும் பலவற்றையும் சார்ந்த உங்களது புகார்களைக் கேட்டறிந்து, பாரபட்சமின்றி அவற்றை நிவர்த்தி செய்வதே எங்கள் பணி.

நியாயமற்ற முறையை அறிந்தால் அது குறித்துக் குரலெழுப்பி, அவ்வாறு நேராமல் தடுக்கத் தேவையான நடைமுறை தீர்வுகளைக் கண்டறிந்து டொராண்டோ நகரத்தை அனைத்துத் தரப்பினருக்குமான சிறந்த நகரமாக மாற்ற நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

இது இலவசச் சேவை மற்றும் அனைவருக்கும் பொதுவானது.


ombudsmantoronto.ca
ombudsman@toronto.ca
416-392-7062